பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத ஷூ ஆவணி மீ 04 உ திங்கட்கிழமை (20-08-1990) ஹிஜ்ரி 1410 முஹர்ரம் பிறை 28 கதிர்: 171

# புத்தளத்திலும் கண்ணி

# 10 சிப்பாய்கள் மரணம்!

## பரந்தனில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 20

நேற்று முன்தினம் காலை 8-30 மணியளவில் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைப் பக்கமாக பதுங்கி முன்னேற முயன்ற இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி, முகாமிற்குத் திருப்பி அனுப்பியதாகத் தெரிவிக்கப் பட்டது.

படையினர் தரப்பில் உயிர், உடல் சேதங்கள் ஏற்பட்டிருக் கலாம் என நம்பப்பட்டது. (உ-5)

## பெருமளவு ஆயுதங்களும் மீட்பு

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 20

புத்தளத்திலும் ஸ்ரீலங்காப் படையினர் மீது விடுதலைப் புலிகள் கண்ணிவெடித் தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள். இந்த தாக்குதலில் பத்து சிப்பாய்கள் உயிரிழந்தனர். பெருமளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் மன்னார்—புத்தளம் எல்லைப் புறத்தில் உள்ள முள்ளிப்பாலத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இராணுவ வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் மன்னார் பொன் பரப்பி முகாமிலிருந்து பழுக் காத்துறை இராணுவ முகாமுக்கு உழவு இயந்திரத்தில் சென்ற இராணுவத்தினர் மீது உப்புவெளியில் வைத்து இந்த அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலின்போது பின்வரும் ஆயுதங்கள் தங்களால் மீட்கப்பட்டதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

★ ரி-56-2 — இரண்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி செயலகத்தில் சன்னப் பொதிகள் மீட்பு!

யாழ்ப்பாணம், ஆக. 20

கிளிநொச்சி செயலக திட்டமிடல் பிரிவுக்குள் இருந்து துப்பாக்கிச் சன்னங்கள் அடங்கிய பொதிகள் கண்டுபிடிக்கப் பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

சாக்கு மூடைக்குள், உமிக்கு நடுவில், சேதமுறாத வகையில், லாவகமாக இந்தச் சன்னங்கள் அடுக்கப் பட்டிருந்தனவாம்!

கிளிநொச்சி செயலகத்திற்கு அருகில் முன்னர் இராணுவ முகாம் அமைந்திருந்தது என்பதும் —

அந்த முகாமை விடுதலைப் புலிகள் சுற்றி வளைத்து முற்றுகையிட்டிருந்த போது, ஹெலிக் கொப்டர், விமானங்களில் இருந்து உணவு மற்றும் ஆயுதங்கள் முகாமிற்குள் போடப்பட்டன என்பதும் தெரிந்தவையே.

இவ்வாறு போடப்பட்ட (3ஆம் பக்கம் பார்க்க)

## எலக்ரோனிக் கண்ணிவெடியில் இதுவரை 1,000 படையினர் காயம்!

கொழும்பு, ஆக. 20

விடுதலைப் புலிகளுக்கும் — இலங்கை அரசுப் படையினருக்கும் இடையில் தற்போது வெடித்திருக்கும் சண்டையில் இதுவரை விடுதலைப் புலிகளின் கண்ணிவெடிக்கு இலக்காகி சுமார் ஆயிரம் படையினர் காயமடைந்திருக்கின்றனர்.

பாதுகாப்புஅமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க இத்தகவலை வெளியிட்டதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

எலக்ரோனிக் முறையில் வெடிக்கும் நவீன கண்ணி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அம்புலன்ஸ் மீது இனி தாக்குதல் நடக்காதாம்!

யாழ்ப்பாணம், ஆக. 20

ஆஸ்பத்திரி அம்புலன்ஸுகள்மீது வானத் தாக்குதல் மேற்கொள்ளப்படமாட்டாது என்று பாதுகாப்பு அமைச்சு உறுதிமொழி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்-போதனா ஆஸ்பத்திரி அம்புலன்ஸை நோக்கி கடந்த வெள்ளிக்கிழமை பொம்மரிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்து

(3 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் - கொழும்பு லொறிச் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வாய்ப்பு?

யாழ்ப்பாணம், ஆக. 20

உணவுப் பொருள்களைக் கொண்டு வரும் பொருட்டு யாழ். - கொழும்பு லொறிச் சேவையை ஆரம்பிக்க பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இதற்கான தீவிர முயற்சியில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஈடுபட்டுள்ளதாகவும்—

அனேகமாக அந்த முயற்சி பயன் அளித்து, லொறிச் சேவையை இன்னும் இரண்டு அல்லது மூன்று நாட்களில் தொடங்கக்கூடியதாக இருக்கும் என்றும்— நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

யாழ். - கொழும்பு லொறிப் போக்குவரத்தை வழமைக்குக் கொண்டுவந்தால் உணவுப் பிரச்சினை ஓரளவு தீரும் என்று யாழ். செஞ்சிலுவைச் சங்கம் வலியுறுத்தி வந்ததை அடுத்து செஞ்சிலுவைச் சங்க

(3 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சிக்கு உணவு; 20லொறிகளில் இன்று வரும்

கொழும்பிலிருந்து அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு இருபது லொறிகள் இன்றுகாலை கிளிநொச்சிக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது;

கிளிநொச்சி அரச அதிபரின் முயற்சியை அடுத்து அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரினால் இந்தப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும்—

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கண்காணிப்புடன் லொறிகள் அனுப்பப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(உ-3-5)

## நல்லூர் தேர் காண பக்தர் வெள்ளம்!

யாழ்ப்பாணம், ஆக. 20

பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத் தேர்த் திருவிழா நேற்றுக் காலை வெளிவீதி உலாவுடன் வழமைபோல வெகு சிறப்பாக நடைபெற்றது.

உற்சவம் ஆரம்பமாகிக் கடந்த 23 நாட்களாக முருகப் பெருமான் உள்வீதி உலா மட்டுமே வந்து அடியார்களுக்குக் காட்சி தந்தார். ஆனால் நேற்றுக் கூடிய பல்லாயிரக் கணக்கான பக்தர்களுக்கு அருட்காட்சி தரும் பொருட்டு வெளிவீதி உலாவும் வந்தார்.

நகரத்தில் இருந்து மட்டுமன்றி, குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும், வெளி ஊர்களில் இருந்தும் பாதகமான பாதுகாப்புச் சூழ்நிலையையும் பொருட்படுத்தாது

(3-ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதலில் இராணுவ வாகனம் சேதம்

யாழ்ப்பாணம், ஆக. 20

மன்னாரில் வங்காலை இராணுவ முகாமிலிருந்து தள்ளாடி இராணுவ முகாமுக்குச் சென்றுகொண்டிருந்த இராணுவ வாகனம் ஒன்றின் மீது கடந்த சனியன்று விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் வாகனம் சேதமுற்றது.

இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல் தெரியவில்லை என்று விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-5)

## பரபரப்பான சூழ்நிலையில் தமிழக சட்டசபை கூடுகிறது

சென்னை, ஆக. 20

அ.தி.மு.க இரண்டாக பிளவுபட்டதன்பின்னர்- பரபரப்பான சூழ்நிலையில் இன்று தமிழக சட்டசபையின் புதிய கூட்டத்தொடர் ஆரம்பமாக இருக்கிறது.

அ.தி.மு.க ஜெயலலிதா அணிக்கும் திருநாவுக்கரசு அணிக்கும் இடையில் மோதல் ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக சட்டசபை கட்டடத்தைச் சுற்றி பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

அ.தி.மு.க தலைமை அலுவலகக் கட்டடத்தின் உரிமை

(3 ஆம் பக்கம் பார்க்க)

ஈழத் தமிழருக்கு ஆதரவாக

## விஜயகாந்த், எஸ்.எஸ்.சந்திரன் நேற்று உண்ணாவிரதம்

ஈழத் தமிழர் படுகொலையாவதைக் கண்டித்து நேற்று தமிழகத்தில் பரவலாக பல இடங்களில் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது.

சென்னையில் நடந்த உண்ணாவிரதம் ஒன்றில் பிரபல நடிகர் விஜயகாந்த், எஸ். எஸ். சந்திரன் ஆகியோரும் பங்குபற்றினர். (உ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### சிறுவர் நவீனம்

மீரா வெளியீடு, ''இராவணன் கோட்டை'' ரூபா 20/- மாயாஜால மந்திரதந்திர வீரதீரச் செயல்கள் நிறைந்தது. விற்பனையாகின்றது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் - சுன்னாகம்; திருக்கணிதம், சிவம்மெடிக்கல்ஸ் - சாவகச்சேரி; பூபாலசிங்கம், ஸ்ரீகாந் புத்தகசாலைகள் - நல்லூர்.
[14068]

### பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஆக. 20

வடக்கு கிழக்குப் பகுதிகளில் அமைதியும் சமாதானமும் வேண்டி மட்டுவில் இந்து இளைஞர் மன்றம் மூன்று தினங்களாக மட்டுவில் ஞான வைரவர் கோவிலில் கூட்டுப் பிரார்த்தனையும் விசேஷ பூசையும் நடத்தியது. (இ)

# அரச ஊழியர்களின் சம்பளத்தை பணமாக அனுப்பக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக 20

யாழ். மாவட்டத்தில் பணத்துக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை நீக்க அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை பணமாக அனுப்புமாறு அத்தியாவசிய சேவைகள் நாயகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை யாழ். மாவட்டத்தில் உள்ள வர்த்தகர்கள் தமது வியாபாரம் மூலம் கிடைக்கும் பணத்தை வங்கிகளில் வைப்பில் இட அதனை மக்களுக்கு காசாக வங்கிகள் வழங்கி வந்தன.

யாழ்ப்பாண வர்த்தகர்கள் தற்போது பணத்தை கிளிநொச்சி, மன்னார், வவுனியா போன்ற இடங்களில் கொடுத்து பொருள்களை கொள்வனவு செய்ய ஆரம்பித்துள்ளதால் வங்கிகளில் இந்த பணப்பரிமாற்றம் தற்போது குறைந்துவிட்டது.

இதனால் அரசாங்க ஊழியர்களின் சம்பளக் காசோலைகள், தனியார் சொந்தக் கணக்கு காசோலைகள் ஆகியவற்றை மாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனை அடுத்தே அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளத்துக்குரிய தொகையை காசாக அனுப்புமாறு யாழ். அரச அதிபர் கோரியுள்ளார்.

இந்தப் பணம் வந்தால் ஓரளவு பணப்புழக்கம் ஏற்படும் என நம்பப்படுகிறது. (இ-3-5)

## இடம் பெயர்வு

கொழும்புத்துறை, ஆக 20

குருநகர் கடலிலிருந்து பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதால் குருநகர் ஐந்து மாடிப் பகுதியைச் சூழ உள்ள மக்கள் பலர் இடம் பெயர்ந்துள்ளனர்.
[இ-30]

## தென்மராட்சியில் அதிர்வு

கொடிகாமம் ஆக 20

யாழ்ப்பாணப் பகுதியில் வீசப்படும் குண்டு தென்மராட்சி கிழக்குப்பகுதி வீடுகளையும் அதிர வைக்கிறது. [இ-75]

## ''தென்றல்'' உதவி

யாழ்ப்பாணம், ஆக 20

காங்கேசன்துறை, மயிலிட்டிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அகதிகள் முகாமில் தங்கி இருக்கும் அகதிக்குடும்பங்களுக்கு அரிசி, தேங்காய், பெருந்தொகையான மரக்கறிவகைகளை 'தென்றல்'' சமூகசேவை பிரிவினர் வழங்கினர். (இ)

## வவுனியா வைத்தியசேவை: விரிவுபடுத்த முயற்சி

வவுனியா பிராந்திய சுகாதார பிரிவுக்கு உட்பட்ட வவுனியா வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகளின் சேவையை விரிவுபடுத்த செஞ்சிலுவைச் சங்கம் முயற்சி மேற்கொண்டுள்ளது.

புதுக்குடியிருப்பு, மல்லாவி, நட்டான்கண்டல், புளியங்குளம், நெடுங்கேணி ஆகிய இடங்களிலுள்ள வைத்தியசாலைகளின் நிலைமையை நேரில் அவதானித்து நடவடிக்கை எடுப்பதற்காக செஞ்சிலுவைச் சங்கத்தின் குழு ஒன்று வவுனியா செல்கிறது. (இ-3-5)

## பொது மலசல கூடங்கள்

பருத்தித்துறை, ஆக. 20

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நான்கு பொது மலசல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
[இ-118]

## விழிப்புக்குழு

கொடிகாமம் ஆக. 20

கொடிகாமம் பகுதியின் பாதுகாப்பு நலன்களைக் கவனிக்க விழிப்புக்குழு ஒன்றை கொடிகாமம் வட்டாரப்பொறுப்பாளர் திரு. இராகுலன் அமைத்துள்ளார். (இ-75)

## இந்து இளைஞர் பேரவைபயிற்சி

சாவகச்சேரி, ஆக. 20

தென்மராட்சியிலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் உள்ளவர்களுக்கு சுயதொழில் பயிற்சி வழங்குவதற்கு யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை முன் வந்துள்ளது.

இதன் ஆரம்பக் கட்டமாக முதலாவது பயிற்சியை மட்டுவில் மகாவித்தியாலத்தில் ஆரம்பித்து வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. [இ-31]

## அமைதி வேண்டி கலசாபிஷேகம்

கொடிகாமம், ஆக. 20

நாட்டில் சமாதானம், அமைதி வேண்டியும் தற்போதைய இராணுவ அக்கிரமங்களுக்கு பூரணதீர்வு வேண்டியும் உசன் அருள்மிகு கந்தசுவாமி கோயிலில் கலசாபிஷேகம் நடைபெற்றது. இதனை இந்து இளைஞர் மன்றத்தினர் ஒழுங்கு செய்திருந்தனர். (மு-75)

## சிற்றூர் அவை

கோப்பாய் ஆக. 20

கோப்பாய் வடக்கு பகுதி சிற்றூர் அவை கோப்பாய் மத்தி, கோப்பாய் வடக்கு என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. [இ-72]

## ப. நோ. கூ. ச. தலைவர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக 20

சகல பல. நோ. கூ. சங்கத் தலைவர்களுக்குமான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு நீர்வேலி பல. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெறும்.

கூட்டத்திற்கு அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் மாதிரி நிர்வாக [illegible] பகுதியினர் கேட்டுள்ளார்கள். (இ)

## தலைமையகம் ஒப்படைக்க கோரி ஜெயலலிதா மகஜர்

பொலீஸாரால் சீல் வைக்கப்பட்டுள்ள அ. தி. மு. க. தலைமைக் காரியாலயக் கட்டடத்தை தனது அணியிடமே ஒப்படைக்க வேண்டும் என்று கோரும் மகஜர் ஒன்றை சென்னையில் ஜனாதிபதி வெங்கட்ராமனைச் சந்தித்து செல்வி ஜெயலலிதா சமர்ப்பித்தார்.

இதே வேளை அ. தி. மு க., இந்திரா காங்கிரஸ் உட்பட எட்டுக்கட்சிகள் கூட்டாக ஜனாதிபதி வெங்கட்ராமனிடம் சமர்ப்பித்த மகஜர் ஒன்றில் —

தமிழகத்தில் சட்டமும் ஒழுங்கும் சீர் குலைந்து விட்டன என்றும் அ. தி. மு. கவின் உட்கட்சித் தகராறில் மாநில அரசு மற்றும் பொலீஸ் தலையீடு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)


## பிறந்தநாள் வாழ்த்து

### செல்வி இந்திரலோகன் டினோஜா

மீசாலை வடக்கைச் சேர்ந்த இந்திரலோகன் அருள்மணி தம்பதிகளின் செல்வப் புத்திரி 'டினோஜா' தனது முதலாவது பிறந்தநாளை இன்று (20-08-90) குதூகலமாக தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, பெரியப்பா, பெரியம்மா, அப்பன் அண்ணா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் முருகப்பெருமான் அருளால் சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டுகாலம் நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

(14061)

## பனை அபிவிருத்திச் சபை ஊழியர்கள் கவனத்துக்கு

பனை அபிவிருத்திச்சபையின் சகல ஊழியர்களும் எதிர்வரும் 22-08-90 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் திருநெல்வேலி விவசாயப்பாடசாலை மண்டபத்தில் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

பொதுமுகாமையாளர்,
பனை அபிவிருத்திச் சபை.

[சி-5168]

## 41ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 10 - 08 - 1920

உதிர்வு: 11 - 07 - 1990

### திரு. கணபதிப்பிள்ளை சிவக்கொழுந்து

அன்பின் தெய்வமே எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டதேன். ஐயா, படுக்கையில் வைத்துப் பார்க்கக் கூடாதென்றோ நொடிப் பொழுதில் உன் உயிர் கவர்ந்தான் கொடிய காலன்.

அன்னாரின் இறுதிச் சடங்கிலும் வீட்டுக் கிரியைகளிலும் கலந்து கொண்டு எங்கள் துயரில் பங்கேற்று ஆறுதல் அனுதாபங்களைத் தெரிவித்த சகலருக்கும் எங்கள் குடும்பத்தாரின் சார்பில் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நெட்டிலிப்பாய்,
கோண்டாவில்.

[சி-5169]

## பட்டப்படிப்புகள் கல்லூரி

இல 78. பலாலி வீதி, திருநெல்வேலி.

[திருநெல்வேலிச் சந்தியிலிருந்து யாழ் நகர் நோக்கி 400 யார் தூரத்தில்)

### அறிவித்தல்

எமது கல்லூரியில் கல்விபயிலும் மாணவர்கள் அனைவரும் 26-08-90 ஞாயிறு காலை 9.00 மணிக்கு மேற்கூறப்பட்ட விலாசத்திற்கு தவறாது சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றீர்கள். வரும்பொழுது பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பதிவேட்டையும் பதிவு இலக்கத்தையும் கொண்டுவரவும்.

இயக்குனர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி.

(14072)

## விஷ கடி வைத்திய நிலையம் இடமாற்றம்

யாழ். மாநகர விஷ வைத்திய நிபுணரும், சித்த வைத்திய கலாநிதியுமாகிய டாக்டர் க. சிற்றம்பலம் தற்பொழுதுள்ள சூழ்நிலை காரணமாக இடம் பெயர்ந்து வேலணை வங்களாவடியில் விஷ வைத்தியம் உட்பட சகல ரோகங்களுக்கும் இரவு பகல் வைத்திய சேவை செய்து வருகிறார்.

டாக்டர் க. சிற்றம்பலம்

[14067]

## கண்ணீர் அஞ்சலி

16 - 08 - 1990இல் அகால மரணமடைந்த

### அமரர் கா. திருஞானசம்பந்தர்

(நில அளவையாளரும், ICTAD போதனாசிரியரும்)

நில அளவையியலிலும்
மட்டம் பார்த்தலிலும்
மட்டுமல்லாமல்
பல அறிவுரைகளையும்
போதனைகளையும்
போதித்த ஆசானே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எமது கண்ணீர் அஞ்சலிகள்

ICTAD மாணவர்கள்

தொழில்நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

[14071]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படைப் பீரங்கித் தாக்கு 2 வயதுச் சிறுவன் காயம்

பருத்தித்துறை, ஆக. 20

கடந்த புதன்கிழமை அதிகாலை தாளையடியில் இருந்து முனைவரை மேற்கொள்ளப்பட்ட கடற்படைப் பீரங்கித் தாக்குதலில் கற்கோவளம் ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த எஸ். சௌந்தரராசா என்ற இரண்டு வயதுச் சிறுவன் காயமடைந்தார்.

அவர் உடனடியாக பருத்தித்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பிரெஞ்சுவைத்திய நிபுணரால் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். (இ-118)

# ஈராக் கப்பல்களை நோக்கி அமெரிக்கா எச்சரிக்கை வேட்டு

பக்தாத், ஆக. 20

வளைகுடா நுழைவாயிலில் வைத்து இரண்டு ஈராக்கிய சரக்குக் கப்பல்களை நோக்கி அமெரிக்க யுத்தக் கப்பல் ஒன்று நேற்று எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்தது.

வளைகுடா நெருக்கடி ஆரம்பமான பின்னர் அமெரிக்க யுத்தக் கப்பல்கள் நேரடியாக ஈடுபட்ட முதலாவது மோதல் சம்பவம் இது என்று அறிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தின் பாரதூரமான பின்விளைவுகளுக்கு அமெரிக்காதான் பொறுப்பு ஏற்க வேண்டும் என்று ஈராக் எண்ணைவள அமைச்சர் எச்சரித்தார்.

இதேவேளை அமெரிக்கா அணுஆயுதங்களைப் பாவித்து யுத்தம் நடத்தும் பட்சத்தில் பயங்கர இரசாயன ஆயுதங்களை ஈராக் படைகள் பாவிக்க நேரிடும் என்று பக்தாத் அரசு எச்சரித்து உள்ளது, (இ-எ)

# முல்லைத்தீவு வைத்தியசாலை 2 இடங்களுக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், ஆக. 20

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை புதுக்குடியிருப்புக்கும், முள்ளியவளைக்கும் இடம் மாற்றப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நகரப்பகுதியில் இடம்பெறும் தாக்குதல் சம்பவங்களை அடுத்தே வைத்தியசாலை இடம்மாற்றப்பட்டது.

தற்சமயம் புதுக்குடியிருப்பில் அவசர சிகிச்சைப் பிரிவும் முள்ளியவளையில் பிரசவ பிரிவும் இயங்கி வருகின்றன. (இ-5-3)

# கர்ப்பிணித் தாய்மாருக்கான ஊசி தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஆக, 20

கர்ப்பிணித் தாய்மாருக்கு சுகப்பிரசவத்துக்கு ஏற்றப்படும் ஊசி மருந்துவகைகளுக்கு வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைகளில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த ஊசி மருந்தை கொழும்பில் இருந்து பெற செஞ்சிலுவைச்சங்கம் முயற்சி எடுத்துள்ளது. (இ-3)

# துறைநீலாவணையில் 60 தமிழர் படுகொலை!

## கடந்த வாரம் சம்பவம்

யாழ்ப்பாணம், ஆக. 20

மட்டக்களப்பு துறைநீலாவணையில் 60 அப்பாவித் தமிழ் மக்கள் கடந்தவாரம் முஸ்லிம் ஆயுதபாணிகளால் படுகொலை செய்யப்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்களில் இருந்து தெரியவந்திருக்கிறது.

கடந்த 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று அதிரடிப் படை சகிதம் இப்பகுதிக்குள் நுழைந்த முஸ்லிம் ஆயுதபாணிகள், கைக்கிளில் சென்ற ஐந்து தமிழ் இளைஞர்களை சுட்டுக் கொன்று, டயர் போட்டு எரித்ததாகவும்-

அதே தினம் இரவு 55 தமிழ் மக்கள் வெட்டியும் சுட்டும் படுகொலை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்யட்டது. (உ-5)

# வவுனியாவுக்கு சமீபமான வைத்தியசாலைகளுக்கு வசதி

வவுனியா வைத்தியசாலை இயங்காததால், வவுனியா மாவட்டத்தில் உள்ள நெடுங்கேணி, நட்டான்கண்டல், புளியங்குளம் ஆகிய வைத்தியசாலைகளை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது,

நெடுங்கேணி வைத்திய சாலைக்கு வைத்திய அதிகாரிகளும், தாதிகளும் நியமிக்கப்பட்டு கூடுதல் அளவு வேலைகள் நடைபெறுகின்றன.

இதேபோன்று புளியங்குளம். நட்டான்கண்டல் மத்திய மருந்தகங்களுக்கும் கூடுதல் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன [இ-3-5]

## அம்புலன்ஸ்.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் யாழ்-செஞ்சிலுவைச் சங்கம் முறையிட்டு இருந்தது.

அதனையடுத்து செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டதாகவும்-

இனிமேல் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறமாட்டாது என தெரிவிக்கப்பட்டதாகவும் யாழ்-செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் நேற்று மாலை தெரிவித்தன. (உ-3-5)

## பரபரப்பான-----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யைத் தரும்படி கோரி ஜெயலலிதா தலைமையிலான அ. தி.மு.கவினர் இன்று சட்டசபைக் கட்டடத்தை நோக்கி பேரணி ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

அசம்பாவிதங்கள் ஏற்படாமல் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாநிலத்தின் பல பகுதிகளிலும் இருந்தும் நூற்றுக்கும் அதிகமான அ.தி.மு.க. தொண்டர்களைப் பொலீஸார் கைது செய்து காவலில் வைத்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க அ. தி. மு.கவில் இருந்து மூன்று எம் எல் ஏக்களை பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா வெளியேற்றிய பின்னர் நடைபெறும் சட்டசபையின் புதிய கூட்டத் தொடர் தமிழக அரசியலில் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தக்கூடும் என்று கருதப்படுகிறது.

திருநாவுக்கரசு தலைமையிலான போட்டி அ.தி.மு.கவில் மேலும் 4 அ.தி.மு.க எம்.எல்.ஏக்கள் சேர்ந்துள்ளதால் அதன் பலம் 7 ஆக அதிகரித்துள்ளது. (ஒ-எ)

# சமாதானமாக பேசித் தீர்வு காண்பதே எனது விருப்பம்

## ஜனாதிபதி மீண்டும் பழைய பல்லவி

யாழ்ப்பாணம், ஆக. 20

சமாதானமாகப் பேசி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே எனது விருப்பம்.

ஜனாதிபதி பிரேமதாஸா மேற்கண்டவாறு கூறினார்.

பொத்துவிலில் மூன்று கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மின் விநியோகத் திட்டத்தை ஜனாதிபதி கடந்த சனிக்கிழமை மாலை திறந்து வைத்தார்.

அதன் பின்னர் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வசிக்கும் அனைவரும் நீதியான முறையில் நடத்தப்பட வேண்டும் என்பதே எனது நிலையான கொள்கை.

இது தொடர்பாக சகல அரசியல்கட்சிகளினதும் அபிப்பிராயங்கள் பெறப்பட வேண்டும்.

எனது அரசின் வேண்டுகோளின் பேரில்தான் இந்தியா தனது இராணுவத்தை இலங்கையில் இருந்து வாபஸ் வாங்கிக் கொண்டது. விடுதலைப் புலிகளின் கோரிக்கை காரணமாக இந்திய அமைதிப் படை வெளியேறவில்லை.

நான் ஜனாதிபதியாக வராமலும் இந்தியாவில் திரு வி. பி. சிங் பிரதமராக வராமலும் இருந்திருப்பின் இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்து வெளியேறி இருக்காது.

ஜனாதிபதித் தேர்தலில் எனது வெற்றியை உறுதி செய்தவர்கள் கிழக்கு மாகாண மக்களே. வட மாகாணத்திலும் எனக்கு எதிர்பாராத வெற்றி கிடைத்தது.

ஒன்பது மாகாணங்களில் வாழும் மக்களாலும் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி நானே.

மக்களைக் கொன்று குவிப்பதன் மூலமும், மக்களை அனாதைகளாக்குவதன் மூலமும் வீடுகள் மற்றும் உடைமைகளை நிர்மூலமாக்குவதன் மூலமும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டுவிட முடியாது.

துரதிருஷ்டவசமாக கடந்த ஜூனில் விடுதலைப்புலிகளுடனான மோதல் ஆரம்பித்தது.

விடுதலைப்புலிகளின் தாக்குதலை எதிர்த்து ஆயுதப் படையினரும் பொலீஸாரும் ஈடுபட வேண்டியதாயிற்று.

இதனால் நாட்டின் வளர்ச்சிப் பணிகள் தடைப்பட்டன.

ஜே. வி. பியின் நடவடிக்கைகளை அடக்கியது போன்று விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளும் அடக்கப்படும் என்று நான் உறுதியளிக்கின்றேன்.

முப்படைகளிலும் பொலீஸிலும் இன விகிதாசார அடிப்படையில் ஆட் சேர்ப்பு இடம்பெறுகிறது. மூன்று மாதங்களில் இதன் பலன் தெரியவரும்.

சத்தியம் ஒருநாள் வெற்றி காணும்.

இப்படி ஜனாதிபதி கூறினார். (இ-எ)

## யாழ் - கொழும்பு....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேசக் குழு அந்தச் சேவையை ஆரம்பிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாம்.

லொறிச் சேவையை ஆரம்பிக்கும்பட்சத்தில் இங்கிருந்து ப. நோ. கூ. சங்க, தனியார் லொறிகள கொழும்புக்குச் சென்று உணவுப் பொருள்களை எடுத்துவர முடியும் என்று யாழ். செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ-3-5)

## கிளிநொச்சி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதி ஒன்றே அருகில் இருந்த செயலக திட்டமிடல் பிரிவுக்குள் கூரையைப் பிய்த்துக்கொண்டு விழுந்ததாகக் கருதப்படுகிறது.

அண்மையில் இராணுவம் முகாமிலிருந்து வெளியேறிய பின்னர், செயலகப் பகுதிகளைத் துப்பரவு செய்தபோது சன்னப் பொதிகள் கண்டு பிடிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. (உ-3-5)

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

### செந்தமிழர் காவலனே!

**பல்லவி**

கான மயில் நாதா கந்தனே கடம்ப மார்பா
மோன மா நிலை தவிர்த்து முன்னின்று
காத்தருள்வாய்
— கானமயில் நாதா

**அனுபல்லவி**

ஆனநிறை வாழ்வறியோம் அல்லவிடை
மாழ்கின்றோம்
ஈனர்களின் சிந்தனையால் ஏங்கி நிதம்
வாடுகின்றோம்

**சரணம்**

ஊனலி மான்று மில்லாத எழில் வாழ்வு
நிறைவுடனே
ஆனபயங் களைந் தொழிந்து அமைதி காணத்
துடிக்கின்றோம்
நீயதற்குத் துணைவருவாய் நிர்மலனே சற்குருவே
வேறெமக்கு யார் வருவார் வேலெடுத்து
தேர் வருவாய்
ஆதியிலே உள்ளதெல்லாம் பாதியிலே
பறித்து விட்டார்
பாதியிலே பறிந்த தெல்லாம் மீதியற
-மீட்டளிப்பாய்
நாதியே யில்லார் போல் நாமழுதல் நீதியதோ
சோதியே செழுஞ்சுடரே செந்தமிழர் காவலனே.

— ஏ. நமசிவாயம்

[இன்று நல்லூர்க் கந்தசுவாமி ஆலய 25 ஆம் திருவிழா தீர்த்தோற்சவம்]

## பருத்தித்துறை வங்கிகள்

பருத்தித்துறை, ஆக 20

பருத்தித்துறை இலங்கை வங்கி, பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி ஆகியவை 15 ஆம் திகதி முதல் பொன்னுச்சாமி கோட்டக் கட்டடத்தில் மீண்டும் இயங்கி வருகின்றன. (இ-118)

## ப. நோ. கூ. ச. களவு

பருத்தித்துறை, ஆக. 20

புலோலி ப. நோ. கூ. சங்கத்தின் மடத்தடி மக்கள் கடைக்கிளை இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டன. (இ-118)

## நல்லூர் தேர் காண---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாலை இரண்டு மூன்று மணிக்கே ஆறுமுக வேலவனின் தேரோடும் காட்சி காண ஆயிரக்கணக்கான அடியார்கள் ஆலயத்தில் கூடி விட்டனர்.

உதயன் உதித்தெழும் காலைப் பொழுதில் கந்தன் சந்நிதானத்தின் உள்வீதியும் வெளிவீதியும் மக்கள் கடலலையால் நிரம்பி வழிந்தது.

ஆண்டாண்டு காணும் அதே பக்திப் பரவசத்துடன் காலை 6. 15 மணிக்கு வள்ளி தெய்வானைசமேத ஆறுமுகப் பெருமான் வெள்ளித் தேரில் ஏறி உலா புறப்பட்டார்.

அதிகாலை 4 மணியில் இருந்து விஷேச பூசைகள் நடைபெற்றன.

வசந்த மண்டப பூசையை அடுத்து முருகன் 6. 15 மணி அளவில் பக்தர்களின் அரோகரா கோஷத்துடன் அந்தணர்கள் வேதம் ஓத நாகசுர மேள வாத்தியம் முழங்க, அடியார்களின் பண்ணிசை முழங்க தேரில் ஆரோகணித்தார்.

முதல் நாட்காலை ஏழே கால் மணிக்கு நல்லூர் ஆலயத்துக்கு சமீபமாக பொம்மர் தாக்குதல் நடத்தியிருந்த போதிலும்-

இப்போதைய பொல்லாத போர்த் தொல்லைகள் தீர்ந்து தமிழனுக்கு வெற்றி கிடைக்க வேண்டும், தாம் சுதந்திரப் பிரசைகளாக வாழ வழி தர வேண்டும் என்று முருகனை இறைஞ்சுவதில் அடியார்கள் இதயத்தைச் செலுத்தியிருந்தனர். அதனால் அவர்களை பொம்மர் ஹெலிப்பயம் அணுகவில்லை. ஆற அமர நின்று கந்தனைத் தரிசித்தனர்.

காலை 8. 15 மணிக்கு ஆறுமுகப் பெருமான் இருப்புக்குப் போனார். எனினும் பஜனைகள், பக்தர்களின் பரவச நடனங்கள், அர்ச்சனைகள் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருந்தன.

மாலையில் தேரடித் திருவிழாவும் சிறப்பாக நடைபெற்றது. அதற்கும் ஏராளமான பக்தர்கள் கூடியிருந்தனர். மாலை ஆறு மணிவரை பொம்மரோ, ஹெலியோ நகரில், நல்லூரில் வானில் தெரியவில்லை. (அ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ அகதிகள் குறித்து சட்டசபையில் விவாதம்

சென்னை, ஆக. 20 தமிழக சட்டசபையின் புதிய கூட்டத்தொடர் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

பெருமளவில் இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழகம் வருவது குறித்து சட்டசபையில் விவாதிக்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. (ஒ-எ)

# ஐந்து சத வீதமானோரே வைத்தியசாலையில் கடமை

யாழ்ப்பாணம், ஆக. 20 மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்களில் ஐந்து சதவீதமானவர்களே கடமைக்கு சமுகமளிக்கின்றனர். இதனால் வைத்தியசாலை வேலைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலை சிரேஷ்ட வைத்தியர் ஒருவர் இப்படிக் கவலை தெரிவித்தார்.

தாதிகள், சிற்றூழியர்கள் உட்பட ஊழியர்களும் வேலைக்குச் சமுகமளிப்பது குறைவு. இதனால் வைத்தியசாலை வேலைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. அத்தியாவசிய சேவையை உறுதிப்படுத்தும் வகையில் மனிதாபிமான அடிப்படையில் ஊழியர்கள் சமுகமளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

# நல்லூர் தேர்த் திருவிழாவில் தங்கச் சங்கிலி திருட்டு

யாழ்ப்பாணம், ஆக. 20 நேற்று நல்லூர்க் கந்தன் ஆலய உள் வீதியில் மெய் மறந்து வழிபட்டுக் கொண்டிருந்த பெண் ஒருவரிடம் இருந்து இரண்டரைப் பவுண் சங்கிலி அறுத்துத் திருடப்பட்டது.

நேற்றைய தேர்த்திருவிழாவுக்குக் கூடிய சனநெரிசலைப் பயன்படுத்தி இந்தத் திருட்டு இடம்பெற்றது.

இது சம்பந்தமாக ஒன்றரை வயதுக் குழந்தையுடன் கைதான சாவகச்சேரியைச் சேர்ந்த பெண் ஒருவர் விசாரணை செய்யப்பட்டு வருகிறார். சங்கிலி கிடைக்கவில்லை.

இதேநேரம் பல பெண்களிடம் இருந்த கைப்பைகளில் இருந்து பணம் அபேஸ் செய்யப்பட்ட சம்பவங்களும் நேற்று இடம்பெற்றன.

ஆலய உற்சவம் ஆரம்பமான பின்பு நேற்றுத்தான் திருட்டுகள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

## இலங்கைக்கு கடத்தப்பட இருந்த

# ரூ.20 கோடி பெறுமதியான ஹெரோயின் மீட்கப்பட்டது

சென்னை, ஆக. 20 இலங்கைக்குக் கடத்திச் செல்ல புதைத்து வைக்கப் பட்டிருந்ததாகக் கூறப்படும் பத்து கிலோ ஹெரோயின் போதைவஸ்துவை தூத்துக்குடியில் பொலீஸார் கைப் பற்றினர்.

இதன் வெளிநாட்டுச் சந்தைப் பெறுமதி இந்தியப் பணத்தில் பத்துக் கோடி ரூபா இலங்கைப்பணத்தில் 20 கோடி ரூபாவுக்கு மேல் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் தப்பிவிட்டனர் என்று கூறப்பட்டது. (ஒ-எ)

# விசர்நாய் தடுப்பூசி இல்லை

விசர்நாய் தடுப்பூசி இல்லாததால் பலர் மரணத்தின் விளிம்பில் இருப்பதாக வைத்திய வட்டாரங்கள் கவலை தெரிவிக்கின்றன,

அகதிகளாக மக்கள் வெளியேறுவதால், அவர்களின்நாய்கள் சாப்பிட வழியின்றி அலைந்து விசர்நோய்க்கு உள்ளாகின்றன.

கடந்தவாரம் கிளிநொச்சியில் ஓர் இளைஞன் விசர்நாய் கடித்து வைத்திய வசதிஇன்றி இறந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

விசர்நாய்த் தடுப்பூசி வராவிட்டால் மேலும் பல உயிரிழப்புக்களைச் சந்திக்க வேண்டி இருக்கும்என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5-3)

# கொள்ளையில் ஈடுபட்ட 6 முஸ்லிம் இளைஞர் கைது

கொழும்பு, ஆக. 20 வீடுகளைக் கொள்ளையடிப்பதில் ஈடுபட்டதாகக் கூறப்படும் ஜிகாத் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் ஆறு முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதங்களுடன் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

புத்தளத்தில் இருந்து 15 மைல் தொலைவில் உள்ள கிராமம் ஒன்றில் வைத்து இவர்கள் கைதாகினார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

# மருதானையில் வைத்து 3 தமிழ் இளைஞர் கைது

கொழும்பு, ஆக. 20 கொழும்பில் மருதானை போர்ப்ஸ் வீதியில் வைத்து மூன்று தமிழ் இளைஞர்களை மருதானை - மாளிகாவத்தை பொலீஸார் கைது செய்தனர்.

சந்தேகத்துக்கு இடமான முறையில் சில இளைஞர்கள் அந்த இடத்தில் நிற்பதாகக் கிடைத்த தகவல் ஒன்றைத் தொடர்ந்து பொலீஸார் அவர்களைக் கைது செய்யச் சென்றனர்.

அப்போது அந்த இளைஞர்களில் ஒருவர் பிஸ்டல் ஒன்றை பொலீஸாரை நோக்கி நீட்டியதாகவும் கூறப்பட்டுள்ளது. (ஒ-எ)

# மேஜர் சிந்து வீர மரணம்

யாழ்ப்பாணம், ஆக. 20 அக்கரைப்பற்றில் கடந்த புதனன்று இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த மோதல் சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த மேஜர் சிந்து, வாசு ஆகிய இருவர் வீர மரணம் அடைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல் தெரியவில்லை என்று விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-5)

# சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஆக. 20 மட்டக்களப்பு - திருக்கோவில் இராணுவ முகாமில் இருந்து வெளியேறியதாகக் கூறப்படும் ஈ.பி.ஆர்.எல்,எவ் இயக்க உறுப்பினர் ஒருவரை கடந்த 16 ஆம் திகதி சஞ்சி குடிச்சான் ஆறு என்னும் இடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் சுட்டுக்கொன்றிருப்பதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி நபர் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளையும் ஆதரவாளர்களையும் இராணுவத்திற்கு காட்டிக் கொடுத்து வந்ததாகவும் அந்த வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

# கிளிநொச்சி அரச ஊழியர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 20 கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தில் கடமை ஆற்றும் ஊழியர்கள் மற்றும் அதிபர்கள் உட்பட கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் அரச ஊழியர்கள் அனைவரையும் இன்று திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. எஸ் மாணிக்க வாசகர் கோரி உள்ளார்.

ஆசிரியர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளத் தேவை இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

# முல்லைத்தீவில் ஷெல் தாக்குதல்

முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து நகரப் பகுதியை நோக்கி நேற்றுக்காலை 10மணிதொடக்கம்11.30மணி வரை நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலினால் நகரில் 6 வீடுகள் பலத்த சேதமடைந்தன.

# குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஆக 20 சாவகச்சேரி தனன்கிளப்பு பகுதியில் நேற்று ஞாயிறு காலை 8.00 மணி அளவில் பொம்மர் குண்டுவீசியது.

## புத்தளத்திலும்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

- ★ ரி-56-1 — ஒன்று
- ★ ரி-56 பட் மொடல் — ஒன்று
- ★ தொலைத்தொடர்பு சாதனம்—ஒன்று
- ★ ஜே.ஆர். கிரனேற் — 14
- ★ மகஸீன்—31
- ★ ரவை —797
- ★ தலைக்கவசம்—10
- ★ கோல்ஸர்—8
- ★ சப்பாத்து—3 சோடி

(உ-எ-5)

## எலக்ரோனிக்--:

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெடிகளை விடுதலைப் புலிகள் தற்போது உபயோகிக்க ஆரம்பித்திருப்பதாகவும் —

இதனால் யுத்தப் பகுதியில் இராணுவம்தொடர்ந்து முன்னேறுவது தடைப்பட்டுள்ளதாகவும் இராணுவ அதிகாரி [illegible] மேலும் தெரிவித்தன. [உ-எ]

## உற்சவ காலத்தில்

# இராணுவ நடவடிக்கையை நிறுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக, 20 தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய உற்சவ காலத்தில், ஆலயப் பிரதேசத்தை புனித பிரதேசமாக்குமாறு ஆலய நிர்வாகம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஐ.நா கலாசாரத்தைப் பேணும்பிரிவின் [யுனெஸ்கோ] சர்வதேச விதிகளின் படி ஆலயச் சுற்றாடல் பிரதேசம் புனித பிரதேசமாகக் கணிக்கப்பட வேண்டும். அப்பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளக்கூடாது .

இந்த விதிகளின் கீழ் உற்சவகாலத்தில் இந்த நடைமுறையை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் புதன்கிழமை 22 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 4 ஆம் திகதி வரை இந்த விதிகளை நடைமுறைப்படுத்த கோரப்பட்டுள்ளது.

உற்சவம் எதிர்வரும்23 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருக்கிறது [அ-3-5]

# வீரமுனைச் சம்பவத்தில் தமிழர் வீடுகளும் தீக்கிரை

யாழ்ப்பாணம், ஆக. 20 வீரமுனைப் பிள்ளையார் கோவில் பகுதியில் கடந்த வெள்ளியன்று தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தின்போது தமிழர்களின் பலவீடுகள் மற்றும் உடைமைகளும் முஸ்லிம்களினால் சூறையாடப்பட்ட பின்னர் தீயிட்டுக் கொழுத்தப்பட்டிருக்கின்றன.

பத்துக்கும் மேற்பட்ட குழந்தைகளைக் கொலையாளிகள் காலில்பிடித்து அடித்துக் கொன்றதாகவும்—

எட்டு வயதுக்கு உட்பட்ட 22 சிறுவர்கள், 16 வயதுக்கும் 18 வயதுக்கும் உட்பட்ட 9 பெண்கள், திருமணமான பெண்கள் 33பேர், மற்றும் வயோதிபர்கள் உட்பட 19 ஆண்கள் இந்தச் சம்பவத்தில் குத்தியும், வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டிருப்பதாகவும் —

விடுதலைப் புலிகள் வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது. (உ-5)

# செஞ்சிலுவை விற்பனவு நிலையம்

யாழ்ப்பாணம், ஆக. 20 நல்லூர் சிவன் கோவிலுக்கு முன்பாக செஞ்சிலுவைச் சங்கத்தின் விற்பனை நிலையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. அங்கே முதலுதவிப் பெட்டிகள், முதலுதவிக் கைநூல்கள், செஞ்சிலுவை 'ஸ்ரிக்கர்' கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. (இ-5)

# பஞ்சாப் மாநிலத்தில் பிரதமர் சிங் பாதயாத்திரை

புதுடில்லி, ஆக. 20 இந்தியப் பிரதமர் திரு. வி.பி சிங் தாம் பஞ்சாப் மாநிலத்தில் ஒரு வாரகாலம் பாதயாத்திரை செய்து, அந்த மாநில மக்களின் அபிப்பிராயத்தையும் சஷ்டங்களையும் நேரில் கேட்டறியப் போவதாக அறிவித்தார்.

நேற்று பஞ்சாப் மாநிலத்தில் கலந்து கொண்ட நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுபற்றி திரு. சிங் கூறியதாவது:-

பஞ்சாப் பிரச்சினையை புதுடில்லியில் இருந்து கொண்டு தீர்க்க முடியாது. இங்கு வந்து மக்களின் கருத்துக்கள், அபிலாஷைகளை அறிந்து கொண்டே தீர்க்க முடியும். இம்மாநிலத்தின் பிரச்சினையை குண்டினால் தீர்க்க முடியாது. தொண்டினால் தான் தீர்க்க முடியும்.

நான் பஞ்சாப்பில் பாதயாத்திரை மேற்கொள்ளும் போது எனது பாதுகாப்பை பஞ்சாப் மக்களிடமே ஒப்படைக்கின்றேன். நான் இங்கு கொல்லப்பட்டால் பஞ்சாப் வீரமண்ணில் மரணித்த பெருமையைப் பெறுவேன்- என்றார்.

நாடாளுமன்றத்தின் இப்போதைய கூட்டத்தொடர் முடிந்த பின்னர் தமது பாதயாத்திரையைத் தொடங்கப் போவதாகப் பிரதமர் கூறினார். (அ)

# மரண அறிவித்தல்

## முருகுப்பிள்ளை தவயோகராசா

[முன்னாள் இ. மி. சபை ஊழியர்]

திரு. மு. தவயோகராசா 18-08-1990 அன்று காலமானார்.

அன்னார் திருமதி முருகுப்பிள்ளை தங்கச்சி அம்மாவின் அன்பு மகனும், ரோகினியம்மாவின் அன்புக் கணவரும், நந்தினி, நளினி, நளாயினி, தீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மு. தவராசசிங்கம் [தபால் நிலையம், பருத்தித்துறை], திருமதி ந. பூபதி, மு. தியாகராசா [ஜேர்மனி], மு. செல்வலிங்கம் [ஜேர்மனி] ஆகியோரின் சகோதரரும், திருமதி நாகேஸ்வரி, நல்லையா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் மூன்றாம் குறுக்குத் தெரு இல்லத்தில் 19-08-1990 இல் நடைபெற்று, பூதவுடல் பருத்தித்துறை கந்தண் வெட்டியாள் [முனை] மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக்கொள்ளும்படி அறியத்தருகின்றோம்.

தகவல்:

மா. நல்லையா
3-ம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

(சி/5171)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org